தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 அக்டோபர் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் **பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. **மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வகுப்பில் பின்தங்கிய அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி

*17. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வகுப்பில் பின்தங்கியிருக்கும் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அப் பள்ளியின் ஆசிரியர்களைக் கொண்டே மாலை நேரங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை

ஆடு வளர்ப்புப் பண்ணைகள்

*18. வினா—திரு. ரா. ரா முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது ஆடு வளர்ப்புப பண்ணை எந்தெந்த மாவட்டங்களில் உள்ளது?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தற்போது தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சின்னசேலத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூரிலும் ஆட்டுப் பண்ணைகள் உள்ளன. உதகையில் ஆடு வளர்ப்பு ஆராய்சி நிலையம் ஒன்றும் உள்ளது. இவை தவிர ஓசூர், புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி, செட்டிநாடு ஆகிய ஊர்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஆடுகள் வளர்ச்சிக்கான பிரிவுகள் இருக்கின்றன.

(இ) இது பற்றி விவர அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(* 191-194-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)

[1971 அக்டோபர் 22

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் சேலம் ஜில்லாவில் மேட்டூர் பகுதியில் ஒரு விசேஷமான ஆட்டுப் பண்ணை அமைப்பது என்ற ப்ரொபோஸல் இருக்கிறதா? அப்படியிருந்தால் அது எப்போது அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படியொரு ஆட்டுப் பண்ணை ஏற்படுத்துவதுபற்றி ஆலோசனை இருக்கிறது. அது ஒரு குறிப்பிடத்தக்க உயர் ரக இனத்தை வளர்ப்பதற்குக் கிடைக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைப் பொருத்ததாகும்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லாவில் கிடைக்கும் ஆடுகள் நல்ல ருசியுள்ளதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, சாத்தூரில் மட்டுமல்லாது இராமநாதபுரம் ஜில்லாவில் பல இடங்களிலும் இந்த ஆட்டுப் பண்ணையை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சாத்தூரில் உள்ள ஆட்டுப் பண்ணையின் நோக்கம் கிழக்கரிசல் ஆடுகளைத் தனியாக வளர்த்து நல்ல பொலிக் கிடாய்களை ஆடு வளர்ப்பவர்களுக்குக் கொடுப்பது ஆகும். எனவே, இந்த நல்ல பொலி கிடாய்களும், கிழக்கரிசல் ஆடுகளும் தரப்படும்போது, அவற்றின் மூலம் பரவலாக நல்ல விதமான ஆடுகள் வளர்க்கப்பட்டு, தேவையான அளவுக்கு நல்ல ருசியுள்ள ஆடுகள் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், சாத்தூர், புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி போன்ற இடங்களில் இருக்கும் கால்நடைப் பண்ணைகளில் ஆடு வளர்ப்பதற்குரிய திட்டம் பற்றியும், அதற்காக ஒதுக்கப்பட்ட நிலம் பற்றியும் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே வளர்க்கப்படுகிற ஆடுகள் விவரம் அரசாங்கத்திற்கு மட்டும் தெரிகிறது. ஆனால், கிராமத்தில் இருக்கிறவர்களுக்கு அது சர்வரத் தெரிவது இல்லை. எனவே, கிராமப்புறங்களிலிருக்கும் மக்களுக்கு . இந்த ஆட்டு கலப்பு இனங்கள் போய்ச் சேரும் அளவுக்கு ஏதாவது ஒரு புதிய திட்டம் வகுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த ஆட்டுப் பண்ணைகள் மூலமாகப் பொலிக் கிடாய்கள் உற்பத்தி செய்யப்பட்டு, அவை பல்வேறு கிராமங்களில் உள்ள தேவைக்கு ஏற்ப, அளவான விலையில் விற்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகிற அந்தக் கிடாய்களின் மூலமாகத்தான் பொதுவாக நாட்டிலே அந்த இன வளர்ச்சி ஏற்பட வேண்டும். ஆனால் பொதுவாகவே நம்முடைய நாட்டிலுள்ள ஆடுகளெல்லாம் ஒரு வகையில், உலகத்தில் உள்ள பிற நாடுகளில் உள்ள ஆடுகளின் தரத்தை

1971 அக்டோபர் 22]

நோக்கும்போது, தரம் குறைந்த ஆடுகளாக இருக்கின்றன என்பது ஒன்று. மற்றொன்று—'வெள்ளாடுகள்' என்ன பெயரில் உள்ள கறுப்பு இன ஆடுகள் அதிகமாகவே வளர்க்கப்படுகின்றன. அவற்றினால் பல்வேறுவிதமான தாவர வளர்ச்சி கெட்டுப் போய், பயிர்கள் கெட்டுப் போய் விடுகின்றன என்ற கருத்தும் நிலவுகிறது. இருந்தாலும், எந்த அளவுக்கு அவற்றைக் கட்டுப்படுத்தி நல்ல ரக ஆடுகளை வளர்க்க உதவ முடியுமோ அந்த வகையில் இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் வழிசெய்ய முடியும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, சாத்தூரில் உள்ள அந்த ஆட்டுப் பண்ணைக்கு வேண்டிய தண்ணீர் கிடைப்பதில்லை. அதனால் ஆடுகளுக்கு வேண்டிய புல் உற்பத்தி செய்ய முடிவதில்லை, அதனால் அந்த இடத்திலுள்ள பண்ணையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்கிற ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா?

தமிழ்நாட்டில் உள்ள ஆட்டுப் பண்ணைகளில் எவ்வளவு உரோமம் எடுக்கிறார்கள்? அவை உயர்ந்த ரக உரோமமாக இருக்கின்றனவா? அவற்றை என்ன விலைக்கு விற்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கேள்விகளைப்பற்றிச் சிந்திப்பவர்கள் அவற்றுக்குத் தனியாகக் கேள்வி போடவும் பழக வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, about three or four years back about eight sheep-rearing centres were opened in hosur taluk. They acquired lands, they provided buildings at high cost and they even provided wells. But now the scheme has been given up and the buildings are in a ruined condition. May I know whether the Government will take up the scheme and revive it and see that the buildings are kept in good condition?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி ஆலோசனைக்குரியதாகும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் இருக்கும் ஆடு வளர்ச்சிப் பண்ணைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பொதுவாக, ஆடு வளர்ச்சிப் பண்ணைகள் சிறந்த முறையில் நடைபெறுவதாக நான் கேள்விப் பட்டிருக்கிறேன். நேரில் சென்றும் பார்த்திருக்கிறேன். என்றாலும், ஆடு வளர்ப்பதன் மூலம் வேலை வாய்ப்புக் கிடைப்பது மட்டுமின்றி விவசாயிகள் ஓரளவு தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் முடிகிறது என்ற நோக்கத்தில் கூட்டுறவு ஆடு வளர்ச்சிப் பண்ணைகளை உருவாக்கி அவற்றுக்கு ஆடுகள் வாங்கிக் கொடுப்பது, பொருளுதவி செய்வது போன்றவற்றை அரசாங்கம் செய்து வந்தது இப்பொழுது நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. கூட்டுறவுப் பண்ணைகளை இராமநாதபுரம் திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் உருவாக்கி ஆடுகள் வளர்க்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்துகிறவர்கள் அதை முறைப்படி ஏற்படுத்திவிட்டு அதற்கான பொலிக் கிடாய்கள், அதற்கான ஆடுகள் இந்தப் பண்ணைக்குத் தேவை என்று தெரிவித்தால், ஆடுகள் வழங்கலாம். கூட்டுறவுப் பண்ணைகள் நடத்தும் முறையில் இது இயங்க வேண்டும். ஆனால், இந்த இலாக்கா நேரடியாக முழுவதும் நடத்த இயலாது. கூட்டுறவு முறையில் அதை நடத்த அவர்கள் முன்வந்து, இந்த இலாக்காவைப் பயன்படுத்தி ஆடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையில் உள்ள ஆடு வளர்ப்பு ஆராய்ச்சிப் பண்ணையில் என்ன, என்ன வகை ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆட்டு உரோமத்திலிருந்து என்ன என்ன பொருள்களைச் செய்யலாம் என்பது போன்ற ஆராய்ச்சி உதகையிலுள்ள ஆடுகள் வளர்ப்புப் பண்ணையில் நடைபெறுகிறது. அது உள்ளபடியே தனி வகையான சிறப்பு ஆராய்ச்சியாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வெள்ளாடுகள் வளர்ச்சியை அரசு ஊக்குவிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், வெள்ளாட்டுக் கறி உடம்புக்கு நல்லது என்பதோடு சத்துணவாகவும் இருக்கிறது. நாட்டு வைத்திய முறையில் வெள்ளாட்டுக் கறி சாப்பிடும்படி யோசனை கூறுகிறார்கள். ஆகவே, பாதுகாக்கப்பட்ட இடங்களில் வெள்ளாடுகளை வளர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த வகை ஆடுகளை வளர்ப்பதன் காரணமாக, மக்களுக்கு அவை ஒரு வகையில் இடையூறாக இருக்கின்றன என்ற ஒரு எண்ணம் இருந்து வருகிறது. தனியார் வளர்க்கும் வெள்ளாடுகளினால் பல பயிர்கள் வீணாகிவிடுகின்றன என்ற எண்ணமும் இருக்கிறது. அவை மரங்களில் ஏறி முறித்துவிடும் காரணத்தால் மரங்களின் வளர்ச்சியும் தடைபடுகிறது என்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, பெருமளவில் ஊக்குவிப்பதற்கில்லை. ஆனால், இப்பொழுது அவர்கள் சொல்வது போல மருந்துக்குத் தேவையான அளவு ஆட்டுப் பஞ்சம் இருக்காது என்று நான் நம்புகிறேன்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, இந்த ஆடு வளர்ச்சிப் பண்ணைகளில் இருக்கும் ஆடுகள் உயர்ந்த ரகம் என்று கருதப்படுகிறது. அவை எந்த எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

1971 அக்டோபர் 22]

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கறி சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் கூடிக் கொண்டே வருகிறது. மேலும் வெள்ளாட்டின் கறி உடலுக்கு ஆரோக்கியமானது என்றும் சொல்கிறார்கள். ஆட்டிறைச்சியிலிருந்துதான் ஆயுர்வேத மருந்தான 'அஜ ரசாயனம்' தயாரிக்கப்படுகிறது. ஆகவே, அதிக அளவில் வெள்ளாடுகளை வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஆலோசனைக்குரியது.

அரசு மருத்துவர்களுக்குச் சொந்தமாக தொழில் செய்ய அனுமதி.

*19 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க மருத்துவமனைகளில் டாக்டர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு அதே பகுதியில் வேலை செய்த நேரம் போக மீதி நேரத்தில் சொந்த டிஸ்பென்சரி வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் டாக்டர்களாக பணியாற்றுபவர்களுக்கு அதே பகுதிகளில் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை செய்த நேரம் போக மீதி நேரத்தில் சொந்தமாக டிஸ்பென்சரி வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு உண்டா என்பது கேள்வி. அப்படி ஒரு செயற்குறிப்பு இல்லை.

THIRU K. M. SUBRAMANIAN : Sir, are the Government aware that in Kerala private practice by the Government doctors working in the hospitals is completely banned now?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது கேரள மாநிலத்திலுள்ள சூழ்நிலைக்குரியதாக இருக்கலாம். அது பற்றி நாம் ஆராயவில்லை.

திரு. க. பழனிவேலன் : தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றுபவர்கள், மருத்துவ மனைகளில் வேலை செய்கிற நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் பிரைவேட் பிராக்டீஸ் செய்ய அனுமதிக்கப்படாவிட்டாலும், பல இடங்களில் பிரைவேட் பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக மருத்துவமனையின் சிறப்பான பணி செம்மையாக அமையவில்லை என்பது அரசு அறியுமா? அதைத் தடுக்க ஏதாவது உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து முன்னரே இந்த அரசாங்கத்தால் ஆராயப்பட்டது அதில் பெருமளவு உண்மை இருக்கிறது.